செ.வெ.எண்: 50 நாள் : 13.05.2026

# செய்தி வெளியீடு

## சென்னை மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகளில் உதவி புரிய 'சட்டப்பணி தன்னார்வலர்கள்' (Para Legal Volunteers) மதிப்பூதியம் அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன – சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகளில் உதவி புரிய 'சட்டப்பணி தன்னார்வலர்கள்' (Para Legal Volunteers) தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

தகுதிகள் :

- கல்வித் தகுதி : குறைந்தபட்சம் 12–ஆம் வகுப்பு (Plus Two) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சமூகப்பணி அல்லது உளவியல் தொடர்புடைய பிரிவுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- வயது வரம்பு: 25 முதல் 65 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- ஆசிரியர், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சேவை மனப்பான்மை கொண்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

பணித் தன்மை:– தேர்வு செய்யப்படும் தன்னார்வலர்கள் சென்னைக்கு உட்பட்டுஅந்தந்தப் பகுதி காவல் நிலையங்களில் காணாமல் போகும் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான தகவல்கள் புகார்கள் வரும்போது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்க வேண்டும்.

மதிப்பூதியம்: அரசுவிதிகளின்படி, ஒரு வருகைக்கு (Visit) ரூ. 1000/– மதிப்பூதியமாகவும் ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூபாய் 5000/– மட்டும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை:

மேற்கூறிய வகைகளின் தகுதியுள்ள நபர்கள் தங்களின் கல்விச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்று நகல்களுடன், சுய விவரக் குறிப்பை வருகின்ற 25.05.2026 மாலை 05.30 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவு தபால் வழியாகவோ விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பத்தினை சென்னை மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும்
  http://Chennai.dcourts.gov.in/
- நேர்காணல் தேதி, இடம் மற்றும் இதர விபரங்களை விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்டுள்ள சென்னை மாவட்ட நீதிமன்றத்தின் இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு தபால், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக எந்தவொரு தகவலும் தெருவிக்கப்படமாட்டாது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வருகின்ற 25.05.2026 அன்று மாலை 05.30 மணிக்குள் வந்து சேர வேண்டிய முகவரி

தலைவர்/முதன்மை நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
வடக்கு கோட்டை சாலை
ADR கட்டிடம், சென்னை –600 104.

*****

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலம்**
**சென்னை –01.**